## திராவிட இயக்க இதழ்கள் - 'அறிவுப்பாதை'



சுயமரியாதை இயக்க வீரர்களில் ஒருவரான 'குத்தூசி' குருசாமி அவர்களால் தொடங்கப்பட்ட இதழ், 'அறிவுப்பாதை'. 1964-ஆம் ஆண்டு முதல் இந்த இதழ் வெளிவந்திருக்கிறது.

இதழின் முகப்பு அட்டையில், இதழ் பெயருக்குக் கீழே 'சுயமரியாதை (அறிவியல்) இயக்க வார ஏடு' என்ற முழக்கத்தைத் தாங்கி வந்துள்ளது. இந்த இதழுக்கு கௌரவ ஆசிரியராக சோ.இலட்சுமிரதன் பாரதி என்பவர் இருந்துள்ளார்.

அறிவியல் மனப்பான்மையை, வேகமாக மக்களிடம் வளர்க்க வேண்டும் என்று கருதியதால் தானோ என்னவோ இதழ் வெளியீட்டு வரிசையை 'கிலோமீட்டர்' (ஆண்டு), 'மீட்டர்' (அந்த ஆண்டில் அது எத்தனையாவது இதழ்) என்ற புதுமையைச் செய்துள்ளது. 'கட்டுரை', 'நாடகம்', 'கவிதை' ஆகியவற்றுக்கு இந்த இதழில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

படத்தில் காணப்படும் 20/4/66 தேதியிட்ட இதழ் 'குத்தூசி' குருசாமியின் அறுபதாவது ஆண்டு நினைவு மலராக மலர்ந்தது. இந்த இதழின் தலையங்கத்தில், "எடுத்த காரியம் யாவினும் கைகொடுத்து அவரது இணை பிரியாத வாழ்க்கைத் துணைவியாக இருந்த திருமதி.குஞ்சிதம் அம்மையார் தனது 52 வது வயதிலேயே 30/7/61 அன்று அவரைப் பிரிந்தார். அப்பேரிழப்பினால் கையொடிந்து மனமுடைந்தவராக ஆனபோதும், அவர் கடைசிவரை களத்தில் இருந்து தன் கடமையைச் செய்து வந்தார். அவருடைய உறுதியான ஆற்றலே அவரது தோழர்களுக்கு 'அறிவுப்பாதை'யைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்ற உரத்தை அளித்தது என்று சொல்லலாம்" என்று சொல்லப்பட்டுள்ளது.

மேலும், அன்னாரது நினைவைப் போற்றும் வகையில் 'குத்தூசியார் தன்னம்பிக்கைக் குழந்தைகள் இல்லம்' என்ற பெயரில் அவரது பிறந்த ஊராகிய குருவிக்கரம்பையில் பெற்றோர், பொருள் இல்லாதோரின் குழந்தைகளுக்காக ஓர் அமைப்பை உருவாக்க, வாசகர்களை நிதி உதவி அளிக்கக் கோரிய விண்ணப்பமும் இந்த இதழில் வைக்கப்பட்டுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்





வ.சிவஜோதி

### இணையேற்பு முடிந்ததும் சந்தித்தேன்!

சென்னை, விருகம்பாக்கத்தில் 20.4.1995 அன்று எங்களுடைய திருமணம் நடைபெற்றது. கழகத்தின் மீது நான் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றின் காரணமாக இணையேற்பு முடிந்தவுடன், தலைவர் கலைஞரைச் சந்திக்க சென்றேன். அண்ணா அறிவாலயத்தில் தலைவர் கலைஞர் மற்றும் பேராசிரியர் அன்பழகன் ஆகியோரைச் சந்தித்து அவர்களின் வாழ்த்துகளைப் பெற்றுக்கொண்ட பின், எடுத்துக்கொண்ட புகைப்படம் இது. இப்படத்தைப் பொக்கிஷமாகக் கருதி, பாதுகாத்து வருகிறேன்.

- வ.சிவஜோதி,
விருகம்பாக்கம், சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### கோவை சிறையில் பெரியார்!

1933-ஆம் ஆண்டில் 'இன்றைய ஆட்சிமுறை ஏன் ஒழிய வேண்டும்?' என்ற தலைப்பில் 'குடிஅரசு' பத்திரிகையில் கட்டுரை எழுதியதற்காக பெரியார் கைது செய்யப்பட்டு, கோவை சிறையில் அடைக்கப்பட்டார். எதிர்த்து வழக்காடாமல் 9 மாதங்கள் சிறைத்தண்டனை பெற்றார். 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. அதையும் கட்டாமல், சேர்த்து இன்னொரு மாதம் சிறைத்தண்டனை அனுபவித்தார். அப்போது உப்புச் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டு, ராஜாஜியும் கோவை சிறையில் இருந்தார்.

## மாநாடு

ர.பிரகாசு **43**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

ஓவியம் : சிகரன்




# தெற்கில் வேரூன்றியது, கழகம்!

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள்ளேயே 500 கிளைக் கழகங்கள் அரும்பியிருந்தன. ஆனாலும், எதிர்கால வளர்ச்சிக்கு இது போதாது என்ற கருத்தை, 1951-இல் கோவில்பட்டியில் நடைபெற்ற மாநாட்டிலேயே வெளிப்படுத்தியிருந்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அடுத்தடுத்த ஆண்டுகளில் தமிழ்நாடெங்கும் கழகத்தின் வளர்ச்சி எழுச்சி தரக்கூடியதாக இருந்தாலும், தெற்கில் அதன் வேகம் போதவில்லை என்ற உணர்வு பலரிடத்திலும் இருந்தது.

அந்தக் குறையைப் போக்கும் விதமாக அமைந்தது 1958-ஆம் ஆண்டில் நடைபெற்ற மதுரை மாவட்ட தி.மு.கழகத்தின் மூன்றாவது மாநாடு. பழனியில் மார்ச் 8, 9 ஆகிய இரண்டு நாட்கள் மாநாடு நடைபெற்றது. காலை 10 மணிக்கு இராசகோபால் பூங்காவில் தொடங்கிய ஊர்வலம், 11 மணிக்கு மாநாடு நடைபெற்ற மொய்தீன் பிச்சை பந்தலை வந்தடைந்தது. நுழைவுவாயிலின் ஒருபுறம் அண்ணாவின் முழு உருவ ஓவியமும், மறுபுறம் சவுந்திர பாண்டியனாரின் ஓவியமும் வைக்கப்பட்டு மக்கள் மனதைக் கவர்ந்தன.

கழகத் தொண்டர்கள் குடும்பம் குடும்பமாகத் திரண்டதால், முதல் நாளிலேயே பெண்கள் கூட்டம் அலைமோதியது. விழாக் காலங்களை மிஞ்சும் அளவிற்கான கூட்டம் கூடியிருந்தது. இசைமுரசு நாகூர் ஹனிபா திராவிடப் பண் பாட, எம்.ஜி.ஆர். மாநாட்டைத் திறந்துவைத்தார்.

எஸ்.முத்து எல்லோரையும் வரவேற்க, கி.மனோகரன் மாநாட்டிற்குத் தலைமை உரையாற்றினார். மதிய உணவு இடைவேளையிலும் நாகூர் ஹனிபா குழுவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பொன்னம்பலனார், என்.எஸ்.இளங்கோ, எஸ்.எஸ்.தென்னரசு, க.அறிவழகன், இரெ. இளம்வழுதி, அலமேலு அப்பாத்துரை, நடிகமணி டி.வி.நாராயணசாமி ஆகியோர் முதல் நாளில் எழுச்சி உரையாற்றினார். லில்லி என்ற சிறுமியின் பேச்சும் கூடியிருந்தோரைக் கவர்ந்தது. முதல் நாள் இரவு 10 மணிக்கு இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.இராசேந்திரனின் 'புதுவெள்ளம்' நாடகம் நடைபெற்றது.

சந்திரா குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு இரண்டாம் நாள் மாநாடு தொடங்கியது. மேடைவலசு சிதம்பரனார், கிருஷ்ணசாமி ஆகியோரைத் தொடர்ந்து 'இன்பத் திராவிடம்' என்ற தலைப்பில் என்.வி.நடராசன் உரையாற்றினார். "நாம் பல துன்பங்களை அடைந்தோம், இன்னும் அடைந்து கொண்டிருக்கிறோம், இனிமேலும் அடையலாம். ஆனாலும், யாருக்கும் அஞ்சப் போவதில்லை. மிக விரைவில், 'இன்பத் திராவிடம்' திராவிடர்களுக்காக அடையப் போவது உறுதி" என்று சூளுரைத்தார்.

கே.ஏ.மதியழகன், 'விடுதலை முரசு' என்ற தலைப்பிலும், ஏ.கோவிந்தசாமி தனது வடநாட்டுப் பயண அனுபவத்தையும் விவரித்துப் பேசினர். 'போராட்டம்' என்ற தலைப்பிலே உரையாற்றிய அன்னை சத்தியவாணி முத்து, "தி.மு.கழகத்தைப் போல அமைதியான முறையில் போராடக் கூடிய கட்சியை, இந்தியாவில் எதையும் காட்ட முடியாது. அண்ணாவைத் தலைவராகக் கொண்டதற்கு நாம் பெருமை அடைகிறோம்" என்றார். அதன்பிறகு ஏ.வி.பி.ஆசைத்தம்பி, நாவலர் நெடுஞ்செழியன் எனப் பலரும் எழுச்சி உரையாற்றினர்.

'தென்னக ரயில்வேயை விரிவுபடுத்த வேண்டும், திராவிட தனி அரசுத் திட்டம் குறித்து கவனம் செலுத்த வேண்டும், ஊராட்சி மன்றங்களுக்கு நேரடித் தேர்தல் வேண்டும், இந்தித் திணிப்புக்கு கண்டனம், திருப்பூர் பனியன் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும், சோத்துப்பாறையில் அணை கட்ட வேண்டும்' என்பது உள்ளிட்ட இருபது தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இயக்குநர் திருமுகம் உதவியுடன் லால் என்பவர் மொத்த மாநாட்டையும் படம் பிடித்தார். தெற்கில் கழகம் வேர் விட்டு வேகமாக வளருவதற்காக வரலாற்றுப் பதிவானது பழனி மாநாடு!

**...கூட்டம் திரளும்**


## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **43**

**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# பேனா என்கிற திறவுகோல்!

"செங்கோலைவிட, எழுதுகோலே பெரியது, அதை என்னிடமிருந்து யாராலும் பிடுங்கிக்கொள்ள முடியாது" என்று சொன்னவர் நூற்றாண்டு கண்ட நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர். 14 வயதில் தொடங்கிய அவருடைய எழுத்து வாழ்க்கை நினைவு தவறும் வரை தொடர்ந்தது. தன் வாழ்நாளில் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பக்கங்களுக்கு மேல் அவர் எழுதியிருக்கிறார். இந்திய எழுத்தாளர்களுள் காந்திக்கு அடுத்ததாக அதிக பக்கங்களை எழுதிய ஒரே எழுத்தாளர் கலைஞர்தான் என்கிறார் எழுத்தாளர் இமையம்.




கவிதை, கட்டுரை, கடிதம், நாடகம், உரை, சிறுகதை, புதினம், நேர்காணல், திரைக்கதை, வசனம், பாடல்கள், பயணக் கட்டுரைகள், தன் வரலாறு என அவர் தீட்டிய 2 லட்சம் பக்கங்களையும் படித்துக் கடப்பது கடினம். எனவே, அவை அனைத்தின் சாரத்தை தமிழ்ச் சமூகத்திற்கு கொண்டு சேர்க்கும் ஒரு தொகுப்பை வெளியிட்டுள்ளது தமிழ்நாடு பாடநூல் கழகம்.

'சாகித்ய அகாதமி விருது' வென்ற திராவிட இயக்க எழுத்தாளர் இமையம் அவர்கள் தனக்கே உரிய நேர்த்தியுடன் தன்னுடைய தலைவரின் படைப்புகள் அடங்கிய இந்தத் தொகுப்பை மிக அக்கறையுடன் தொகுத்துள்ளார்.

நூற்றாண்டு காணும் ஆளுமைகளை நினைவுகூரும் வகையில், அவர்களுக்கு 'நினைவுத்தடம்' (Reader) வெளியிடும் திட்டத்தினை நம்முடைய 'திராவிட மாடல் அரசு' 2022-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. பேராசிரியர் க.அன்பழகன், எழுத்தாளர்கள் தி.ஜானகிராமன், கு.அழகிரிசாமி, கி. ராஜநாராயணன் ஆகியோரின் நினைவுத் தடங்களைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுத் தடமும் 'கலைஞரின் படைப் புலகம்' என்ற தலைப்பில் 600 பக்க அளவில் வெளியாகி இருக்கிறது.

இதில் கலைஞரின் படைப்புகள் குறித்து, ஒரு அறிமுகத்தை 50 பக்க அளவில் தொகுப்பாசிரியர் வழங்கி இருக்கிறார். அதில் ஒவ்வொரு இலக்கிய வகைமையிலும் தலைவர் கலைஞர் பெற்ற ஆழ்ந்த தேர்ச்சியைக் குறிப்பிடுகிறார். கடிதமோ, சிறுகதையோ, திரையிசைப் பாடலோ அவர் தொட்ட அனைத்திலும் அரசியலும் கொள்கையும் நிறைந்திருக்கும் என்பதை, இந்த அறிமுக பகுதி நமக்குத் தெரிவிக்கிறது.

இதைத் தொடர்ந்து கலைஞரின் அனைத்துப் படைப்புகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் தொகுக்கப்பட்டு இலக்கிய வகைமையின் அடிப்படையில் அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு, நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்கியங்கள் அனைத்தும் இலக்கியத் துறையில் அவரது பன்முக ஆளுமையை நமக்கு வெளிச்சமிட்டு காட்டுகின்றன.

கலைஞரின் படைப்பாற்றல் பற்றி தலைவர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பிறர் எழுதிய கட்டுரைகளும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இறுதிப் பகுதியில் கலைஞரின் படைப்புகள் கால வரிசைப்படி பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அவரது நூல்களின் அட்டைப்படத் தொகுப்பும் இடம்பெற்று இந்நூலை அலங்கரிக்கிறது.


**...வாசிப்போம்.**

**கலைஞரின் படைப்பாற்றல் பற்றி தலைவர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் எனப் பிறர் எழுதிய கட்டுரைகளும் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

**699**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24-26 RNI No.1244/57 WPP No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131